சி.சி.135/2017 **தேதி -07.12.2021**

Mr.S.Parthiban, S/o.SriRamulu என்பவரின் குறுக்கு விசாரணை ம.த.சா.1=

நான் கேபிள் டிவி ஆப்பரேட்டராக பணியாற்றுகிறேன். இந்த வழக்கின் முழுவிவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் தாக்கல்செய்துள்ள புகார் மனு, சத்திய பிரமாண வாக்குமூலம், மற்றும் நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றை நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டேன். எதிரியை கடந்த 13 ஆண்டுகளாக தெரியும். எதிரி எவ்வாறு எனக்கு அறிமுகம் என்றால் எனது உறவினரின் நண்பர் என்ற முறையில் அறிமுகம். எதிரிகவு கடன் கொடுக்கும் முன்பே எதிரியை எனக்கு பழக்கமா என்றால் எனது உறவினரின் வீட்டின் அருகில் வசிப்பதால் அவ்வப்போது பார்த்து பேசி பழக்கம். எதிரி அவருடைய குடும்ப சூழ்நிலைக்காகவும், அவர் வீடுகட்டுவதற்காகவும், பணம் வாங்கினார். நான் எதிரிக்கு 03.07.2012 மற்றும் 2013 வருடம் 8வது மாதம் கடன் கொடுத்தேன். நான் இரண்டு தவணையாக கடன் கொடுத்தேன். எதிரிக்கு ரொக்கமாகத் தான் கடன் கொடுத்தேன். டினாமினேஷன் எனக்கு ஞாபகமில்லை. எதிரிக்கு எனது வீட்டில் வைத்து தான் கடன் கொடுத்தேன். எதிரிக்கு கடன் கொடுக்கும் போது அவரிடம் எத்தனை காசோலைகள் வாங்கினேன் அவற்றின் எண் என்னால் கூறமுடியுமா என்றால் காசோலை எண்கள் எனக்கு தெரியாது. ஆனால் காசோலை வாங்கினேன். அந்த காசோலைகள் தான் இந்த வழக்கு காசோலைகள் என்றால் சரிதான். ம.த.சா.ஆ.1. கடன் பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டதாக காணப்படுகிறதென்றால் தேதி எதுவும் காணப்படவில்லை. ம.த.சா.ஆ.1 மற்றும் ம.த.சா.ஆ.2 ல் கடன் வாங்கியவர் மற்றும் கடன் கொடுத்தவரின் முழு விலாசம் மற்றும் வயது காணப்படவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.1 மற்றும் ம.த.சா.ஆ.2 ல் சாட்சி கையொப்பம் ஏதும் காணப்படவில்லை. ம.த.சா.ஆ-1 மற்றும் ம.த.சா.ஆ.2 ல் எதிரி தான் தயார் செய்தார். நான் எத்தனை ஆண்டுகளாக சென்னையில் இருக்கிறேன் என்றால் நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் சென்னை தான். எதிரிக்கு அனுப்பப்பட்ட அஞ்சலக கவர் ம.த.சா.ஆ.6ல் எதிரியின் விலாசத்தில் பின் கோடு 602101 என்று காணப்படுகிறது. இந்த வழக்கு தொடர்பாக எதிரி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. எனது புகார் மனுவில் ஆவணங்கள் பட்டியலில் எதிரி 03.12.2016 அன்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக காணப்படுகிறதென்றால் சரிதான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பமிட்ட தேதி 01.03.2016 என்று

காணப்படுகிறதென்றால் சரிதான். எதிரியின் முகவரியை சரியாக குறிப்பிடாமல் அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யப்பட கூடாது என்ற உள் நோக்கத்துடன் நான் அறிவிப்பை அனுப்பி அந்த அறிவிப்பானது சரியான முகவரி குறிப்பிடாத காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

//Sd//(S.Muthukrishna Muralidas.,)

Judicial Magistrate,
Fast Track Court,
(Magisterial Level),
Ambattur.

//True Copy//

Judicial Magistrate, Fast Track Court,
(Magisterial Level),
Ambattur.